# முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண்.38/2016

வாதி தரப்பு 1வது சாட்சி பரிதாபேகம் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.பரிதாபேகம் | வயது | : | 64/24 |
| கணவர் பெயர் | : | முகமது கனி | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | புதுக்கோட்டை | தொழில் | : | வீட்டு குடித்தனம் |

நாள்-10.02.2026

வா.சா.1

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

______1) இந்த வழக்கு புரோநோட் எழுதும்போது எனது தங்கையின் கணவர் அசரப் அலி இருந்தார். அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை.

2) என்னிடம் நகை அடகு வைத்தற்கான ரசீதுகள், பாஸ் புத்தகங்கள் இல்லை. வெகு நாட்களாகிவிட்டதால் அந்த ஆவணங்கள் இல்லை. ஆனால் வங்கியிலிருந்து ஸ்டேட்மெண்ட் வாங்கி தாக்கல் செய்ய முடியும்.

3) நான் அடகு வைத்த நகைகளை திருப்பி விட்டேன். அந்த நகைகளை திருப்பியதற்கான ரசீதுகள் 10 வருடங்கள் ஆகிவிட்டதால் தொலைந்துவிட்டது. ஆனால் அதற்கு வங்கியிலிருந்து ஆவணங்கள் வாங்கி தர முடியும்.

4) என்னுடைய பூர்வீக வீடு கதவு எண்.5, சேஷையா ரோடு, புதுக்கோட்டை என்றால் சரிதான். அந்த வீடு என் கணவரின் தாயார் என் கணவருக்கு தானமாக கொடுத்த வீடு ஆகும்.

5) 2014-2015-ல் அந்த வீட்டை என் மூத்த மகளுக்கு என் கணவர் எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியும். மேற்படி வீட்டை எனது மூத்த மகள் திருவாரூரை சேர்ந்த நந்தகோபால் என்பவருக்கு கிரையம் எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. அந்த வீட்டில் 4,5 வருடம் இருந்தேன். 2020 வரை இருந்தேன். அந்த வீடு ஏலம் போன விபரம் எனக்கு தெரியாது. அந்த வீட்டிலிருந்து வந்தபிறகு எனது நாத்தனார் வீட்டில் குடியிருந்தேன்.

6) 2020-ம் வருடம் எனக்கும், எனது மூத்த மகளுக்கும் தகராறு வந்ததால் நான் வீட்டை விட்டு வெளியேறிவிட்டேன். மூத்தமகள் அந்த வீட்டில்தான் அதன் பிறகு குடியிருந்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது.

7) குடியிருந்த பூர்வீக வீட்டை எதிர்காலத்தில் வருமானம் உருவாக்க வேண்டும் என்பதற்காக பிரதிவாதியின் ஆலோசனையை பெற்று, பிரதிவாதிக்கு உறவினரான திருவாரூரை சேர்ந்த நந்தகோபால் என்பவருடன் ஒரு பெயரளவிற்கு ஒரு கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டு, அதன்பேரில் நந்தகோபாலுக்கு சொத்தினை விற்பதை போல் ரூ.2 கோடியே நாற்பது லட்சம் வங்கி கடன் பெறுவதற்கு நான், எனது கணவர் மற்றும் எனது மூத்த மகள் ஷெரின் சித்தாரா ஆகியோர் சேர்ந்து முடிவு செய்தோம் என்று சொன்னால் சரியல்ல.

8) நான் குடியிருந்த வீட்டை பெயரளவிற்கு ஒரு கிரையம் ஏற்படுத்தி நந்தகோபால் என்பவரின் பெயரில் வங்கி கடன் ரூ.2,40,000,00/- பெற்று அதில் எனது குடும்பத்தினரின் பங்காக ரூ.1,20,000,00/- எடுத்துக்கொள்வது, மீத பணத்தை நந்தகோபால் எடுத்துக்கொள்வது, இருவரும் வங்கி தவணை தொகையை மாதம் மாதம், அவரவர்கள் பெற்ற அவரவர்கள் பங்கு தொகைக்கு ஏற்ப தவணை செலுத்துவது என முடிவு செய்து அதன்படி விற்பனை செய்ய ஏதுவாக நானும், எனது குடும்பமும் பிரதிவாதியிடம் ரூ.30,00,000/- ரொக்கமாக பெற்று, சென்ட்ரல் பேங்கில் நிலுவையில் இருந்த வீட்டு கடனை அடைத்துவிட்டு, நானும் அறிந்து எனது மூத்த மகள் ஷெரின் சித்தாராவும் திருவாரூரை சேர்ந்த நந்தகோபாலும், ஒரு எழுத்து மூலமான ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு, அதன்படி கடன் பெற்று எனது மூத்த மகள் ஷெரின் சித்தாராவின் வங்கி கணக்கில் ரூ.2,40,000,00/- வரவு வைக்கப்பட்டு, அதில் ரூ.88,00,000/- பிரதிவாதி பிரபுவின் வங்கி கணக்கு மூலம் திருவாரூர் நந்தகோபாலுக்கு அனுப்பப்பட்டும், பணப்பரிமாற்றம் நடந்த விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

9) அதேபோல் பிரதிவாதியால் அறிமுகப்படுத்தப்பட்ட அவரது உறவினரான நந்தகோபால் என்பவரை பற்றி எனக்கும், என் குடும்பத்திற்கும் முழுமையாக தெரியாது என்பதால், அவர் பெயரில் பெயரளவிற்கு ஏற்படுத்தப்பட்ட வீட்டின் கிரைய சாசன வங்கி கடன் பணப்பரிமாற்றத்திற்கு பொறுப்புறுதியாக எனது மூத்த மகள் ஷெரின் சித்தாரா, பிரதிவாதி அவரது மனைவி புவனேஷ்வரி, அவரது சகோதரர் ராஜேந்திரன் ஆகியோரிடமிருந்து நிரப்பப்படாத வங்கி காசோலைகளையும், நிரப்பப்படாத பிராமிசரி நோட்டுக்களையும் மற்றும் நிரப்பப்படாத வெள்ளைத்தாள்களில் கையெழுத்துக்கள் பெற்றிருந்தார்கள் என்றும், அவ்வாறு பெறப்பட்ட காசோலைகளில் ஒன்றைத்தான், பிராமிசரி நோட்டில் ஒன்றைத்தான் நான் இந்த வழக்கில் பேர்இரவலாக லாபம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் பிராமிசரி நோட்டையும், காசோலையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) வா.சா.ஆ.2 ஆவணத்தின் அசலை தாக்கல் செய்து, இந்த வழக்கில் பரிகாரம் கோரவில்லை என்றாலும், அதனால் இந்த வழக்கு நிலைநிற்ககூடியது அல்ல என்றாலும் சரியல்ல. அசல் காசோலை குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

11) 29.01.2015ல் வா.சா.ஆ.2 காசோலையை பிரதிவாதி என் வீட்டில் வைத்து என்னிடம் கொடுத்தார். மேற்படி காசோலையை கொடுக்கும்போது யார் யார் என்னுடன் இருந்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 11 வருடங்கள் ஆகிவிட்டது.

12) பிரதிவாதி வா.சா.ஆ.2ஐ பூர்த்தி செய்து என்னிடம் கொடுத்தார். அவர் கையாலேயே பூர்த்தி செய்தாரா என்று ஞாபகம் இல்லை. அவர் எங்கு வைத்து பூர்த்தி செய்தார் என்றும் ஞாபகத்தில் இல்லை.

13) காசோலையை கொடுத்த சமயத்தில் நான் அசலுடன் கூடுதலாக பணம் எதுவும் கேட்கவில்லை.

14) பிரதிவாதி என்னிடம் எந்த காலத்திலும் கடனாக பணம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

15) எனது மூத்த மகளுக்கு பிரதிவாதி காசோலை கொடுத்த விபரமும், எனது மகள் பிரதிவாதிக்கு எதிராக காசோலை வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கில் பிரதிவாதிக்கு தண்டனை கிடைத்த விபரமும் எனக்கு தெரியாது.

16) நான் உண்மைக்கு மாறான விபரங்களை கூறி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால், நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.